
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :29 January 2026*

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# அசோகமித்திரன் மற்றும் அறிவுமதியின் கிணறு - ஒப்பீடு

# *Ashokamitran and Arivumathi's well - A comparison*

**முனைவர் அ விஜயன்**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வு மையம், அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு மாவட்டம், கேரளம் 678104

***Dr. Vijayan A*** *, Associate Professor , Govt College Chittur Palakkad District Kerala*

***Abstract:***

*Various beliefs have been passed down through generations among the people. Among them are some beliefs concerning village wells. This article examines, through a comparative analysis, the stories of two writers, Ashokamitran and Arivumathi, which were written under the single theme of 'kinaru'.*

***Keywords: Well, Ashoka Mittra, Arivumati, Short Story, Novel***

**ஆய்வுச் சுருக்கம் :**

மக்களிடையே தலைமுறை தலைமுறையாகப் பல்வேறு நம்பிக்கைகள் கடத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் கிராமத்துக் கிணறுகள் தொடர்பான சில நம்பிக்கைகளும் அடங்கும். இந்தக் கட்டுரை, 'கிணறு' என்ற ஒரே கருப்பொருளில் எழுதப்பட்ட அசோகமித்திரன் மற்றும் அறிவுமதி ஆகிய இரு எழுத்தாளர்களின் கதைகளை ஒரு ஒப்பீட்டுப் பகுப்பாய்வின் மூலம் ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள் :** கிணறு, அசோகமித்ரன், அறிவுமதி, சிறுகதை, நாவல்

**முன்னுரை**

நம்பிக்கை - அதுதானே எல்லாம் என்ற கூற்று இக்காலத்தில் வணிக விளம்பரத்தால் பெரும் புகழ் பெற்றுவிட்டது. ஆம். நம்பிக்கையே வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம். மனிதன் தோன்றிய காலம் முதலே அவனுக்கு பல்வேறு நம்பிக்கைகள் தோன்றியிருக்கக்கூடும். அறிவியல் வளர்ச்சி உச்சம் தொட்ட இக் காலத்திலும் கூட நம்பிக்கை மனித வாழ்வில் தொடர்ந்து நிலைபெற்று வருவது கண்கூடு. அந்த வகையில் கிணறு குறித்த நம்பிக்கையும் சோதிடம் குறித்த நம்பிக்கையும் இன்றும் நாட்டாரிடையே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறன. அத்தகைய நம்பிக்கையைக் குறித்து எழுத்தாளர் அசோகமித்திரனும் பாவலர் அறிவுமதியும் கிணறு என்ற கதை வழியே எடுத்துரைத்துள்ளனர். அக் கதைகளை ஆய்வு செய்வது இந்த கட்டுரையின் நோக்கமாகும்

**கதைக்கரு**

கிணறு - அசோகமித்திரன் - தமிழ்நாட்டிலிருந்து ராஜஸ்தானுக்கு சுற்றுலா சென்ற சிறுவன் கிணற்றில் விழுந்து இறந்துவிடுகிறான். அவனுக்கு தண்ணீரில் கண்டம் என்று அவனது தாய் அச்சப்பட்டாள். அப்படியே ஆகிவிட்டது.

கிணறு - அறிவுமதி.- கற்பு குறித்த கற்பிதத்தால் வாழ்கைக்கையைத் தொலைத்த ஒரு பெண் கிணற்றில் மூழ்கி தன் வளையல்களை உடைத்து தன்னை விதவை எனப் பாவித்து தன் வாழ்நாள் முழுதும் திருமணம் செய்துகொள்ளாமலேயே இருந்து விடுகிறாள்.

காதலால் ஏமாற்றப்பட்ட அடுத்த தலைமுறை சேர்ந்த பெண் அதே கிணற்றில் மூழ்கி உயிர்விடத் துணிகிறாள் அது தவறு என்பதை உணர்ந்து வாழ்ந்து காட்டுவதே சரி என்ற எண்ணத்தில் வெளியே வருகிறாள்.

**முதன்மைக் கதாபாத்திரங்கள்-** அசோகமித்திரன் கதையில்.- சதாசிவம்

துணைமைக் கதாபாத்திரங்கள் , சதாசிவத்தின் தாய், நண்பன் கோட்டை விடுதியின் பணியாள்- கிணற்றுப் பெண்

**முதன்மைக் கதாபாத்திரங்கள்** , அறிவுமதி கதையில்.-

மல்லிகா, முதுபெண் (கிழவி) , முத்தரசு

துணைமைக் கதாபாத்திரங்கள்- முருகப்பன் (மருதாயியின் கணவன்)

**பண்பாட்டுக் கூறு**

நாட்டார் பண்பாட்டுக் கூறுகளுள் முக்கியமான ஒன்று நம்பிக்கை. பல்வேறு வகையான நம்பிக்கைகள் நாட்டாரிடையே இன்றும் நின்று நிலவுகின்றன. அவை குறித்த அறிவும் கதைகளும் பரம்பரை பரம்பரையாக அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டு வருகின்றன. நம்பிக்கைகளை நல்ல நம்பிக்கைகள் என்றும் மூடநம்பிக்கை என்றும் சிலர் சுட்டிக் காட்டுவர். ஆனா ல் நம்பிக்கைகள் நம்பிக்கைகளே என்று நாட்டுபுற அறிவியலாளர்கள் வாதிடு கின்றனர். அவற்றை அறிவியல் உண்மை சார்ந்தன என்றும் அறிவியல் உண் மை சாராதனை என்றும் பிரிக்கலாம் என அவர்கள் பிற அறிஞர்களின் கருத்துகளின் அடிப்படையில் வழிகாட்டுகின்றனர். மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள் கற்றோர் கல்லாதோர் கிராமத்தார் நகரத்தார் என்ற வேறுபாடு இன்றி நின்று நிலவுவதைக் காணமுடிகிறது

**சோதிடமும் நம்பிக்கையும்**

ஜோதிடம் பார்த்தல் ஜோதிடரின் கூற்றை அப்படியே நம்புதல் பஞ்சாங்க அடிப்படையில் பிறந்த நாள், நேரம் நட்சத்திரத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் ஜாதகத்தையும் நம்புதல் என நம்பிக்கை நாட்டாரிடையே இன்றும் தொடர்ந்து வருகிறது. குறிப்பாக சில சமூகத்தினரிடம் அது சற்று அதிகமாகவும் கடுமையாகவும் கூட காணப்படுவது உண்டு.

ஜாதகமும் ஜோதிடமும் பொய்ப்பதில்லை , ஒரு பொருள் குறித்த மக்களின் நம்பிக்கை நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது. இன்ன பிற நம்பிக்கையை மெய்ப்பிக்கும் பொருண்மையிலான கதைகளை புகழ்பெற்ற இரண்டு எழுத்தார்கள் ஒரே தலைப்பில் எழுதியுள்ளனர் ஒருவர் அசோகமித்திரன் இன்னொரு பாவலர் அறிவுமதி. இருவரும் கிணறு என்ற தலைப்பில் கதை புனைந்துள்ளனர்.

**கதைச் சுருக்கம்: - அசோகமித்திரனின் கதை**

இதற்கு முன் போகாத இடத்திற்குச் செல்கிறான். சதாசிவம். இதுவரை வீட்டை விட்டு வேறெங்கும் வெளியே சென்றதும் இல்லை. ஆகவே மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று தாய் அறிவுறுத்துகிறார். குறிப்பாக தண்ணீரைக் கண்டால் சற்று விலகி இருக்க வேண்டும் என்று ஏனென்றால் அவனுக்கு தண்ணீர் கண்டம் இருப்பதாக ஜோதிடர்கள் ஜாதகத்தில் குறித்து தந்து இருப்பதாகவும் அவள் அச்சப்படுகிறார். அவனது தந்தைக்கும் அது குறித்த அச்சம் இருப்பதாக எச்சரிக்கிறாள். நண்பனுடன் செல்வதால் அனுப்பி வைக்கிறாள் தாய்

வினாடி வினாப் போட்டியில் வென்றதற்காக ராஜஸ்தானுக்கு சுற்றுலா செல்ல வாய்ப்பு கிடைத்த சதாசிவம் என்ற சிறுவன் அங்கு ஒரு பெரிய உணவு விடுதியில் (கோட்டை-அரண்மனை — தற்பொழுது நவீன நட்சத்திர விடுதி) தங்க வைக்கப்படுகிறான். அங்குள்ள மலையின் தன்மைக்கு ஏற்றவாறு கட்டடப்பட்ட அரச கோட்டை அது. பல்வேறு அறைகள் உள்ளன. உள்ளே ஒருமுறை சென்றவர்கள் மீண்டும் திரும்பி வர தடுமாறும் அளவிற்கு வளைந்து நெளிந்த பாதை, ஏற்ற இறக்கம் கொண்ட படிக்கட்டுகள். நவீன காலத்திற்கு ஏற்றவாறு நவீனமயமாக்கப்பட்டு குளிரூட்டும் வசதி உள்ள சின்ன சின்ன அறைகள். ஆயினும் வரவேற்பு அறையினைத் தவிர வேறு எங்கும் (அறைகளில்) தொலைபேசி வசதி இல்லை

மிகச் சிறிய அறை. ஒரு கட்டிலும் ஒரு சின்ன நாற்காலியும் மட்டும் அறையில் போடப்பட்டிருக்கின்றன. சிறுவன் தங்கி இருக்கும் அந்த அறை யில் சன்னல் கம்பிகள் திறக்கக்கூடாதபடி பிணைக்கப்பட்டுள்ளன. ஆண்டுகள் ஆனதால் அந்தக் கம்பிகள் துருப்பிடித்து இற்றுப் போயிருந்தன. அச் சன்னலைத் திறக்க விரும்பினான் சதாசிவம். பணியாள் கூடாது என்று சொன்னபோதும் அவனை கட்டாயப்படுத்தித் திறக்க முயற்சி செய்தான் ஆனால் அவனாலும் திறக்க முடிய வில்லை. இரவில் தூக்கம் கொள்ளாத போது சன்னல் கம்பிகளைக் கழட்டி விட்டு திறக்க முயன்றான். திறந்து விட் டான் அங்கே தன் அறையை ஒட்டி ஒரு பெரிய கிணறு இருந்தது. ஆழமான கிணறு. தண்ணீர் இருந்தது. சாளரத்தை அடை த்து வைத்த காரணம் புரிந் தது. அந்தக் கிணறு குறித்து பலவராக சிந்திக்கி றான் . எட்டிப் பார்க் கிறான். அழகிய நிலவு கிணற்றில் பிரதிபலிக்கிறது. இன்னும் சற்று ஆழமாக பார்க்கிறார் அங்கே ஒரு அரசி போன்ற, தேவதை போன்றொரு பெண் படுத்திருக்கிறாள். அவன் அந்தக் கிணற்றுக்குள் தலை குப்புற குதிக்கிறான். அம்மாவின் பயம் அப்படியே பலித்தது

**கதைச் சுருக்கம்: - அறிவுமதியின் கதை**

தமிழகத்தின் கிராமங்களில், ஊர் புறத்தில் உள்ள ஒரு கிணறு காவு வாங்கும் தன்மை கொண்டு இலங்குவதை அறிவுமதி தம் கதைவழியே எடுத்துரைக் கிறார்.

ஒரு பெண்ணை அவளது குமரப் பருவத்தில் காவு வாங்கத் துடித்த ஊர்க்கி ணறு அடுத்த தலைமுறையைச் சேர்ந்த இளம்பெண்ணையும் காவு வாங்கத் துடிக்கிறது. ஆனால் அதிலிருந்து இருவருமே தப்பித்து விடுகிறார்கள்.

ஆண்களால் கற்பிக்கப்பட்ட கற்பு பெண்களுக்கு மட்டுமே என்பதில் கிராமப்புற பெண்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். கற்பைப் புனிதமாக கருதிய பெண்கள் கிராமப்புறங்களில் இன்றும் (எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் கூட) இருப்பதைக் காணலாம். அந்தக கற்பிற்கு சிறிதளவேனும் பங்கம் நேர்ந்தது என்றால் உடனே தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டு தன்மீதுபட்ட களங்கத்தை, தம் பெற்றோருக்கு ஏற்பட்ட அவமானத் தைப் போக்க வேண்டும் என்ற கருத்தை எண்ணத்தை அந்தப் பெண்கள் கொண்டிருந்தனர். அப்படி ஒரு காலம் தமிழகத்தில் இருந்தது. இன்றும் சிறித ளவு அத்தகைய எண்ணம் தொடர்கிறது என்றால் அது மிகையன்று. புகழெ னின் உயிரையும் கொடுப்பார். பழியெனின் உலகமே கிடைத்தாலும் கொள்ளலர் என்ற தமிழரின் உயர்ந்த நோக்கு இந்தச் சூழலில் தவறாகப் புரி ந்து கொள்ளப்பட்டது எனலாம்.

ஊர் புறக்கிகணற்றில் குளித்துக் கொண்டிருந்த பொழுது தன் உடலை (நிர்வாணத்தை) ஓர் ஆண்மகன் - இன்னொருத்தியின் கணவன் முருகப்பன் (மருதாயியின் கணவன்) - பார்த்து விடுகிறான். ஒரு ஆண்மகன் பார்த்த உடலை வேறு ஒரு ஆண்மகனுக்கு எப்படித் தருவது என்று எண்ணிவள் அவனையே தன் வாழ்நாளில் கணவனாகக் கருதிக் கொண்டிருக்கிறாள்

அந்த இளம் பெண். ஒரு நாள் அடுத்த _தெற்கு - தெருவில் மரண ஓலம் கேட்கிறது: மரண வாத்தியம் வாசிக்கப்படுகிறது தான் கணவனாக பாவித்து கொண்டிருக்கும் அந்த ஆண் இறந்து விட்டதாக அறிந்து கொள்கிறாள். எனவே இதற்குப் பிறகு தனக்கு மணவாழ்க்கை இல்லை என்ற நம்பிக்கையில் அவள் அந்தக் கிணற்றின் உள்ளே குதித்துத் தன் வளையல்கள் எல்லாம் உடைத்துத் களைந்து, தலை முழுகிவிடுகிறாள். அதற்குப் பிறகு திருமணம் செய்துகொள்ளாமலேயே தனித்த பெண்ணாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். வயதாகிவிட்டது.

இப்பொழுது அதே கிணற்றின் அருகே படித்துக் கொண்டிருக்கிறாள் மல்லிகா. தன்னுடைய காதலனாகிய முத்தரசன் அங்கே வருகிறான். இருவ ரும் அந்த காட்டுக்குள் தனிமையில் இருக்க முற்படுகிறார்கள். அங்கே ஒரு கிழவியின் அரவம் கேட்கவே ஓடி விடுகிறான். அவள் பேசிக்கொண் டிருந்தது தனது காதலனுடன் தான் என்பதை அந்தக் கிழவி புரிந்து கொள்கிறாள். பிறகு மல்லிகாவின் வற்புறுத்தலால் தான் வயதாகியும் கன்னியாக வாழ்வதற்கான காரணத்தை விளக்குகிறாள்.

மல்லிகா ஒரு போட்டித் தேர்வுக்காக தன் காதலன் முத்தரவுடன் பெற்றோரின் சம்மத்துடன் சென்னைக்குச் செல்கிறாள் அங்கே இருவரும் ஒரறையில் தங்குகிறார்கள். திருமணம் செய்துகொள்ளும் நம்பிக்கையில் புணர்ச்சி நிகழ்கிறது. மீண்டும் கிராமத்துக்கு வருகிறார்கள். கொஞ்ச காலத் திற்குப் பிறகு அவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் நிச்சயிக் கப்படு கிறது. திருமணம் நடைபெறுகிறது. இதை அறிந்து கொண்டு வருத்தமுற்ற கதாநாயகி அதே கிணற்றுக்குள் விழுந்து தன்னை மறைத்துக் கொள்ள முற்ப டுகிறார். கிணற்றுக்கு அடியில் செல்லும் பொழுது அவளுக்கு அந்தக் கிழவி யைப் போல தானும் கோழையாக இருந்து விடக்கூடாது என்று நினைத்து மாத்திரத்தில் கிழவி களைந்த வளையல்களைக் கண்டெடுத்து உடைத்தெரி ந்துவிட்டு காலை தரையில் ஊன்றி மேலே எழுந்து வந்து விடுகிறாள்.

வாழ்ந்து காட்ட வேண்டும், உயர்ந்து நிற்க வேண்டும் என்ற எண்ணத்தில்.

**கிணறுகள்**

நாட்டார் நம்பிக்கை அனைத்தும் தவறானவை அல்ல. ஜாதகமும் அடிப்படித்தான். ஜாதகமும் சோதிடமும் பலிக்கும் என்ற எண்ணத்தை அசோகமித்திரனின் கதை தோற்றுவிக்கிறது என்ற கருத்து கதையைப் படித்தவுடன் எழலாம். ஆனால் அறிவியல் வளர்ச்சி உச்சத்தை அடைந்து நிற்கும் இக்காலத்திலும் குழந்தைகளிடம் இத்தகைய நம்பிக்கைகலையும் எண்ணங்களையும் பதியச் செய்தல் கூடாது என்பது மட்டுமின்றி பெரியோர்களும் பெற்றோர்களும் கூட அத்தகைய நம்பிக்கைகளிலிருந்து விட்டுவிலகி நிற்க வேண்டும். அப்பொழுதுதான் தேவையற்ற, தீமைகள் செய்யும் அத்தகைய நம்பிக்கைகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாமல் தடைபடும் என்ற கருத்து அசொகமித்திரன் கதை வழியே உணர்த்தப்படுகிறது. மேலும் அவை குறித்த விழிப்புணர்வை ஊட்ட வேண்டும். அறிவியல் முறையான உண்மையை எடுத்துரைக்க வேண்டும். உளவியல் தொடர்பான எச்சரிக்கை விடுக்க வேண்டும். அப்படி இருந்தால் விதியை மதியால் வெல்லலாம். இல்லையேல் விதி வென்றுவிடும் என்ற கருத்தும் எடுத்துரைக்கப்படுகின்றது. உள்ளூர் வாசிகளுக்கு நாயைக் கண்டால் அச்சம் வெளியூர் வாசிகளுக்கு தண்ணீரைக் — நீர் நிலைகளைக் - கண்டால் அச்சம் என்று சொல்லும் ஒரு வழக்கு நாட்டாரிடையே காணப்படுகின்றது. எனவே வெளியூர்களுக்குப் போகும் பொழுது ஆழமறியாத குளம், கிணறு, ஏரி, கடல் இன்னபிற நீர்நிலைகளில் கவனத்துடன் இருக்கவேண்டும். தேவையின்றி, பாதுகப்பின்றி அவற்றைப் பயன்படுத்துதல் கூடாது. குறிப்பாக துணையின்றி அத்தகைய இடங்களுக்குச் செல்லுதல் கூடாது, பெற்றோர் குழந்தைகளை அனுப்பவும் கூடாது ஆகிய கருத்துகளையும் கதையாசிரியர் எடுத்துரைக்க விழைகிறார்.

பழமையான கட்டிடங்களை , அரண்மனைகளை, கோட்டைகளைப் பாது காத்தல், புதுப்பித்தல், பயன்படுத்துதல் அவற்றில் பெருமை கொள்ளு தல், அந்த அரசர்களின் வரலாற்றை -,அந்தரங்க வரலாறு உட்பட அனைத்தை யும் தெரிந்து கொள்ளல் அனைத்திற்கும் இக்கதைகள் வித்திடுகின்றன. நீர் ஆதாரத்தின் பயன்பாடு குறித்து பல்வேறு கருத்துக்களும் அறிந்துகொள்ள இக்கதைகள் வழிவகுக்கின்றன.

ஊர் குடிக்க நீர் கொடுக்கும் கிணறு காவு வாங்கும் தன்மையையும் கொண்டு இலங்கும் என்ற நம்பிக்கை நாட்டார் மத்தியில் இருப்பதையும் காணலாம். குறிப்பாக நாட்டுப்புறத்தில் உள்ள கிணறு உயிரையும் உயிர்ப் பொருட்களையும் காவு வாங்கும் என்றும். கிணறு அதுவாக காவு வாங்கு வதில்லை. அப்படி கற்பித்துக் கொள்ளப்படுகிறது என்பதையும் விளக்கும் கிணறு என்ற கதையை பாவலர் அறிவுமதி எழுதியுள்ளார். ''வஞ்சனைப் பேய்கள் என்பார் இந்த மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்; துஞ்சுது முகட்டில் என்பார்.'' என்ற பாரதியாரின் வரிகளும் நாட்டார் நம்பிக்கை களுக்கு வலுசேர்ப்பதைக் காணலாம். ஆனால் காதல் தோல்வியால், காத லானால் ஏமாற்றப் பட்டால் பெண்கள் தற்கொலை செய்துகொள்வது மிகவும் கோழைத்தனமானது. மாறாக அத்தகையோர் வாழ்ந்து காட்ட வேண் டும், வாழ்வில் உயர்ந்து நிற்க வேண்டும், தன்னை ஏமாற்றிய ஆண்கள் கண்டு வெடகப்படும்படி வாழ வேண்டும் பிறருக்கு நல்ல முன்னுதாரனமாக இருக்க வேண்டும் என்ற கருத்துகளை எடுத்துரைக்கவே, சிந்தனையை விதைக்கவே பாவலர் அறிவுமதி தமது கிணறு என்ற சிறுகதையைப் படைத்துள்ளார்.

பெண்ணை காவு வாங்கிய விட்டதாக அல்லது ஏற்கனவே காவு வாங்கிய கிணறு என்ற நம்பிக்கை இருப்பதாக அறிவுமதியின் கிணறு என்ற கதை பேசுகிறது ஒருவரை மட்டும் அல்ல மேலும் பல உயிர்களை காவு வாங்கத் துடிப்பதாகவும் அந்தக் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெண் படித்தவள் என்பதாலும் பரம்பரை சிந்தனையில் இருந்து விடுபட்டு புதியன சிந்திக்க முற்படுகிறாள், புதிய பழக்கத்தை முன்னெடுக்க முற்படுகிறாள், அதில் வெற்றி பெறுகிறாள். அவ் இளம் பெண் தற்கொலையை தடுக்கும் வழிமுறையைச் சுட்டுகிறள். இக்கால யுவதி யுவாக்கள் காதல் தோல்விக்காக தற்கொலை செய்துகொள் ளும் மனோபாவத்தில் இல்லை என்பதும் இங்கு பெருமையுடன் எண்ணத்தக்கது

**தொகுப்புரை**

இப்படி ஒரே தலைப்பில் அமைந்த இரண்டு கதைகளை இரு வேறு ஆசிரியர்கள் எழுதியிருந்தாலும் அதனுடைய கதைகளின் பொருண்மை ஒன்றாகவே அமைந்திருப்பதைக் காண முடிகிறது. மரணம், மரணம் தொடர் பான நம்பிக்கைகள், எண்ணங்கள் — குறிப்பாக காதல் தோல்வி அடைந்த பெண்களின் — ஆகியன இரு கதாசிரியர்களின் கதைகளின் வழியே வெளிப் படுகின்றன. அறிஞர்களின் சிந்தனை ஒன்று போல் அமையும் என்பதற்கு இவ்விருக்கதைகளும் சான்று பகிர்கின்றன. சமூக நம்பிக்கை அது தொடர்பான நன்மை , தீமை, அறிவின்மை தொடர்பான தாக்கம் கதையாசிரியர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் ஒருவரைப் பார்த்து அல்லது படித்து ஒருவரது எழுத்து இன்னொருவரில் தாக்கம் செலுத்தியிருக்கலாம் என்று சொல்வதற்கு இங்கு வாய்ப்பு இல்லை .

ஜாதகம் பலிக்கும் என்ற பெற்றோரின் நம்பிக்கை — தண்ணீரில் கண்டம் - உண்மையாகிறது.

கிணறு, பெண்களைக் காவு வாங்குவதில் குறியாக இருக்கிறது. காதல், திருமணம், தாம்பத்தியம் தொடர்பான பெண்களின் நம்பிக்கை வெளிப் படுகிறது. அந்த நம்பிக்கை பெண்களுக்கு இயல்பாக எழுந்ததா? அல்லது ஆண்களால் கட்டமைக்கப்பட்டதா?. ஆனால் அந்த நம்பிக்கையிலும் கட்ட மைப்பிலும் மூழ்கி தங்கள் இன்னுயிரைத் தொலைத்த பெண்கள் ஏராளம். ஆனால் இனிமேல் ஒரு பெண்ணும் எதற்கும் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்ற உயரிய நோக்கமும் கதைகளின் வழி வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்கள், விரக்தி அடைந்தவர்கள், காதலில் தோல்வி பெற்றவர்கள், வாழ்க்கையை வெறுத்தவர்கள் தற்கொலை செய்து கொள்ள துணிவர். இன்று அதற்குப் பல வழிகளை மக்கள் அறிந்துள் ளர் அல் லது அறிவது எளிது. ஆனால் 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஊர்க் கிராமப்புறங்களில், ஊரின் ஊர்ப்புறத்தில் காணப்படும் கிணறு அத் தகைய உயிரை காவு வாங்கிக் கொண்டிருந்த்து என்பது மக்களின் நம்பிக் கையாக இருந்தது. இன்றும் அந்த நம்பிக்கை ஓரளவு தொடர்கிறது.

கற்பு குறித்த கிராமப்புற பெண்ணின் நம்பிக்கை அவளது வாழ்க்கை யை வெறுமையாக்குகிறது. கிணற்றில் விழுந்து வளையல்களை உடைத்து கல்யாணம் ஆகாமலே விதவைப் போல வாழ்கிறாள் அவள். காதல் தோல்வி யால் மனு முடிந்த இன்றைய இளம் பெண் அதே கிணற்றில் விழுந்து தற்கொ லைக்கு முயற்சி செய்த போதும் அது கோழைத்தனம் என்று எண்ணி வாழ்ந்து காட்டுதே வெற்றி பெறுதல் என்று கிணற்றின் மேற்பரப்பிற்கு வருகிறாள். பழமையான நம்பிக்கைகளை, நன்மை தராத எண்ணங்களைச் சாடும் கதை யாசிரியர்கள் நேர்மறையான எண்ணங்களும் நல்ல நம்பிக்கைகளுமே மனித வாழ்வை மேம்படுத்தும். மக்கள் அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்துகளை முன்வைக்கிறார்கள்

## பார்வை நூல்கள்(References)


1. அழிவற்றது, அசோகமித்திரன் , காலச்சுவடுபதிப்பகம் 2005
   *(Azhivattathu , Asokamithiran , Kalachuvadu Publication 2005*
2. வெள்ளைத்தீ ,அறிவுமதி,சாரல்வெளியீடு. 2004
   *(Vellaithee ,Arivumathi, Charal Publication 2004 )*
3. தேசியகீதம், பாரதியார் , NCBH 2024
   *(Dhesiyageetham , Bharthiyar , NCBH 2024 )*
4. நாட்டார் வழக்காறு சிலஅடிப்படைகள் ,தே. லூர்து, -,நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை
   *Naattaar Vazhakkaattiyal , Chila AdippadaikaL, The Luurthu , Naattaar Vazhakkaattiyal Ayivu Maiyam , Paalayamkottai*
5. ஒப்பிலக்கியஅறிமுகம்- தமிழண்ணல் , மீனாட்சிபுத்தகநிலையம்
   *(Oppilakkiya Arimukam, ThamizhaNNal , Meenakshi Puthaka Nilayam )*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com